தருமமூர்த்தி இராவ் பகதூர்
கலவல கண்ணன் செட்டி
இந்துக் கல்லூரி (சுழற்சி-1)



தமிழ்த்துறை

முரண்களரி படைப்பகம்

கல்வெட்டு பேசுகிறது (ISSN 2456-0243)
பன்னாட்டு இலக்கிய இதழ்

# தமிழ் இலக்கியங்களில் அறம்

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

தொகுதி-1

# தமிழ் இலக்கியங்களில் அறம்

## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை
## (தொகுதி-1)

பதிப்பாசிரியர் :
பேரா. **க.பேபி**
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
தமிழ்த்துறைத் தலைவர்

இணைப் பதிப்பாசிரியர்கள் :
பேரா. **ச.மு.சங்கவை**
முதுமுனைவர் **கா.இலட்சுமி**
முதுமுனைவர் **மு.கஸ்தூரி**
முனைவர் **லெ.ஆனந்தி**

பதிப்புக் குழு :
முனைவர் **ஜெ.முனுசாமி**
**(யாழினி முனுசாமி)**
கவிஞர் **சொர்ணபாரதி**

வெளியீடு :
**தமிழ்த்துறை (சுழற்சி-1)**
**தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி**
பட்டாபிராம், சென்னை - 600 072.
கல்வெட்டு பேசுகிறது (பன்னாட்டு இலக்கிய இதழ்) ISSN 2456-0243
முரண்களரி படைப்பகம், சென்னை.

# நூல் விவரக் குறிப்பு


- தமிழ் இலக்கியங்களில் அறம்
  பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை (தொகுதி–1)

- பதிப்பாசிரியர் பேரா. க. பேபி

  இணைப் பதிப்பாசிரியர்கள்:
  பேரா. ச.மு.சங்கவை
  முதுமுனைவர் கா.இலட்சுமி
  முதுமுனைவர் மு.கஸ்தூரி
  முனைவர் லெ. ஆனந்தி

  பதிப்புக் குழு:
  முனைவர் ஜெ.முனுசாமி
  (யாழினி முனுசாமி)
  கவிஞர் சொர்ணபாரதி

- முதற்பதிப்பு 11–03–2025



- @ கட்டுரையாளர்களுக்கு



- 184 பக்கம்

- டபுள் டெம்மி அளவு

- ரூ. 300/–

- அச்சாக்கம் : பெண்டகன் எண்டர்பிரைசஸ், சென்னை–5.

- வெளியீடு
  தமிழ்த்துறை (சுழற்சி – 1)
  தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி
  இந்துக் கல்லூரி, பட்டாபிராம், சென்னை – 600 072.

  கல்வெட்டு பேசுகிறது (பன்னாட்டு இலக்கிய இதழ்) ISSN 2456-0243
  முரண்களரி படைப்பகம், சென்னை.


**(கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள கருத்துக்களுக்குக்**
**கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பு)**

| வ. எண் | தலைப்பு | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|---|
| 39 | திரிகடுகம் போற்றும் அறம் | முனைவர் செள.பா.சாலாவாணி ஸ்ரீ | 131 |
| 40 | குறுந்தொகையில் காதலறம் | முனைவர் பே.சிவசக்தி | 133 |
| 41 | அறக்கோட்பாட்டியல் அடிப்படையில் பன்னெடுங்காலத் தமிழ் இலக்கியங்கள் | சு. சிவப்பிரகாஷ் | 137 |
| 42 | மணிமேகலை உணர்த்தும் அறக்கோட்பாடும் நிலையாமையும் | முனைவர் த.சிவலிங்கம் | 140 |
| 43 | கலித்தொகை காட்டும் வாழ்வியல் அறம் | முனைவர் கு.சு.செந்தில் | 144 |
| 44 | அற இலக்கியத்தின் தோற்றம் | முனைவர் கா. செல்லத்துரை | 148 |
| 45 | நற்றிணை தலைவன் கூற்றில் மனையறம் | மு.செல்வி | 151 |
| 46 | வள்ளுவத்தில் வாழும் வாழ்வியல் அறங்கள் | முனைவர் பி.செல்வமேரி | 153 |
| 47 | நட்பும் காதலும் | முனைவர் வே. சுயம்புத்தங்கம் | 156 |
| 48 | பட்டினப்பாலையில் வன்முறை! | முனைவர் சீனு. தண்டபாணி | 159 |
| 49 | தொல்காப்பியத்தில் அறம் | முனைவர் தாமரை | 162 |
| 50 | வள்ளுவர் காட்டும் சமுதாய அறம் | முனைவர் ம.தாமரைச்செல்வி | 165 |
| 51 | அறஇலக்கியத்தில் (நல்வழி) வாழ்வியல் சிந்தனைகள் | முனைவர் ச. திருச்செல்வி | 168 |
| 52 | சிறுபஞ்சமூலம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் | ரா. திவ்யா | 172 |
| 53 | அறங்கூறும் நீதிநூல்கள் | தினேஷ்குமார் பா. | 175 |
| 54 | ஆசாரக்கோவையில் வாழ்வியல் ஒழுக்கநெறிகள் | முனைவர் பி.தேவதாஸ் | 179 |
| 55 | திருமந்திரத்தில் தனிமனித அறம் | முனைவர் தே.தேன்மொழி | 182 |

# திருமந்திரத்தில் தனிமனித அறம்

முனைவர் தே.தேன்மொழி
உதவிப்பேராசிரியர் - வேல்ஸ் பல்கலைக்கழகம் சென்னை-117.
செல் : 8610928727 மின்னஞ்சல் : thenmozhi.sl@vistas.ac.in

**முன்னுரை**

ஒழுக்கமே மனிதனை உயர்த்தும் என்றால் அது மிகையாகாது. வாழ்வில் வெற்றி பெற அற ஒழுக்கக் கொள்கையின் சிறப்பினை முதற்கண் அறியவேண்டும். ஒழுக்கமே உலக வாழ்வை செம்மையுற தழைக்க வைக்கும் ஆற்றல் கொண்டவையாகும். ஒவ்வொரு தனிமனிதனும் தங்கள் வாழ்க்கையில் நிலையான இன்பம் பெற அற நெறிக்கொள்கையைப் பின்பற்றவேண்டும். நமது சான்றோர் பெருமக்கள் தாங்கள் இலக்கியங்களில் தனிமனித அறநெறியை அறிவுறுத்தியுள்ளனர். அத்தகைய வழியில் திருமூலரும் திருமந்திரத்தில் பல இடங்களில் தனிமனித அறங்களைப் பற்றி எடுத்துரைத் துள்ளார்.

மனிதனின் வாழ்வு சிறக்க அறத்தின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். எனவே தான் திருமூலர் மக்கள் பின்பற்ற வேண்டிய அற நெறிக்கொள்கைகளை யாவரும் போற்றும் வண்ணம் திருமந்திரத்தில் எடுத்துரைத் துள்ளார். மனித சமுதாயம் நலம்பெற உதவும் வகையில் தனிமனித அறங்களாகக் கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை, வாய்மை, வெகுளாமை, கூடா ஒழுக்கம், பெரியாரைத்துணை கோடல் போன்றவற்றைத் திருமூலர் மந்திரப் பாடலில் பொதித்துப் பாடியுள்ளார். தனிமனித அறம் மேன்மையடைவதற்கு ஏதுவான மந்திரப் பாடல்களின் வழி அறம் சார்ந்த கருத்துக்களை இக்கட்டுரை முன்னெடுக்கிறது.

**கொல்லாமை**

உலகில் பிறந்த உயிர்கள் அனைத்துமே வாழ விரும்புகின்றன. எனவே உயிர்களைக் கொல்வது மிகப்பெரிய குற்றம் ஆகும். ஆறறிவுடைய மனிதன் தன் உயிரை வளர்க்கப் பிற உயிரினைக் கொல்கிறான். அறநூல்கள் இதனை ஏற்பதில்லை. தனிமனித அறத்தை வகுத்த திருமூலர் நாட்டு மக்களுக்குக் கொல்லாமை குறித்து அவரது கொள்கையைத் திருமந்திரத்தில் திறம்பட எடுத்துரைத்துள்ளார். மனிதனாகப் பிறந்த யாவரும் பிறர் உயிர்களைக் கொல்லுதல் கூடாது. தன் உயிருக்காகப் பிற உயிரைக் கொல்லுபவன் நரகத்தில் வீழ்ந்து அழிவான் என்பதை,

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வரிக்கயிற்றாற் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நல்லிடும் என்று நிறுத்துவர் தாமே"

(திருமந்திரம், பா.198)

எனும் மந்திரத்தில் அறிவுறுத்தியுள்ளார். மனிதன் மனிதனாக வாழ்வதற்கு நற்பல அறங்களைப் பின்பற்றி வாழ்வது சாலச்சிறந்தது. மனித குலம் தழைத்து ஓங்க யாவரும் கொல்லாமை கொள்கையைப் பின்பற்றினால் வாழ்வில் நிலையான இன்பத்தை அடையலாம். கொல்லாமை கொள்கையைகொண்டு மனிதன் தனது வாழ்க்கையை மாற்றி கொள்ள இயலும். எனவே திருமூலர் காட்டும் கொல்லாமை கொள்கையைப் பின்பற்றி உயர்வடைவதுடன், பிற உயிர்களைக் காத்தருள முடியும் என்பதை உணர்த்துகிறது.

**புலால் மறுத்தல்**

புலால் உண்ணுதல் என்பது மிகப்பெரிய குற்றமாகும். பிற உயிரைக்கொன்று தன் ஊனினைப் பெருக்குவது மிகவும் இழிவான செயல் ஆகும். மக்களை நெறிப்படுத்தக்கூடிய அனைத்து அற இலக்கியங்களும் புலால் உண்ணாமை அறத்தைப் போற்றுகின்றன. புலால் உண்பது மிகப்பெரிய தீய செயலாகும். திருமூலரும் திருமந்திரத்தில், புலால் மறுத்தல் எனும் தலைப்பில் புலால் உண்ணாமை சிறப்பைக் குறிப்பிட்டுள்ளார். பிற உயிர்களின் உடல்களைக்கொன்று அவற்றை உண்ணும் இழிவை நாட்டு மக்களுக்கு உணர்த்தும் வண்ணம் மந்திரங்களைத் திருமூலர் திறம்பட எடுத்தோதியுள்ளார்.

மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்றால் பிற உயிர்களைத் தன் உயிர்போல் எண்ணவேண்டும். பிற உயிர்களைக் கொன்று தன் உடல் பசியைத் தீர்க்கக்கூடாது. இத்தகு இழிவான

செயலைச் செய்வது மிகப்பெரிய பாவம் ஆகும். எனவேதான் சான்றோர் பெருமக்கள் புலால் உண்ணாமை எனும் அறத்தினைத் தங்கள் படைப்புகளில் எடுத்தோதியுள்ளனர். தனிமனித ஒழுக்கம் சிறக்க புலால் உண்ணக்கூடாது. திருமூலர் புலால் உண்பவர் அடையும் பேற்றைப் பற்றி,

**"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்**
**செல்லாகப் பற்றித்தீவாய் நகரத்தின்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே"**

(திருமூலர், மு.நூ.பா.199)

எனும் மந்திரத்தில் புண்ணென்று இழிவாகப் பேசப்படும் மற்றொரு உயிரின் உடலான புலாலை உணவாக உண்ணும் இழிவானவரை, இயமனின் தூதர்கள் வந்து பலரும் காணும்படி கறையான்களைப் போல இறுகப் பற்றி இழுத்துக்கொண்டு சென்று தீப்பொருந்திய நகரத்தின் முதுகைக் கீழ்ப்பக்கத்தில் கிடத்தி வைப்பர் என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

புலால் உண்ணாமல் இறைவனின் திருவடியை அடைந்தவர்களுக்கு கொலை, களவு, கள், காமம், பொய்பேசல் ஆகிய ஐம்பெரும் பாவங்களும் அவற்றால் வரும் துன்பங்களும் இருக்காது என்பதை,

**"கொலையே களவுகள் காமம் பொய்கூறல்**
**மலைவான பாதக மாம் அவை நீக்கித்**
**தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்**
**கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே"**

(திருமூலர், மு.நூ.பா.199, ப.200)

எனும் மந்திரத்தில் திருமூலர் புலால் உண்ணாதவர் அடையும் நற்பேற்றைப் பற்றி விவரித்துள்ளார். புலால் உண்ணாமல் வாழ்ந்தால் இறைவனின் அருளைப் பெறமுடியும். இறைசிந்தனை மனிதனை மனிதனாக வாழ வழிவகுக்கும் பிற பாவங்கள் செய்யாமல் மனிதகுலம் தழைத்து ஓங்க முடியும். புலால் உண்ணாமல் வாழ்வதே நலம் பயக்கும் என்கிறார்.

**கள்ளுண்ணாமை**

தனி மனித அறத்தைக் கூறும் திருமூலர் கள்ளுண்ணாமை நெறியைச் சமூக மக்களுக்கு வலியுறுத்தியுள்ளார். கள் உண்போர்ச் சிற்றின்பத்தை நாடி பேரின்பத்தை இழக்கின்றனர். உண்போர் உணர்வும் ஒழுக்கமும் கெட்டு இறைஞான நெறியை அடையமுடியாது. கள் உண்பவர் ஒழுக்கத்தில் இருந்து விலகியவர் என்பதை,

**"முழுநீர்க் கள் உண்போர் முறைமை அகன்றோர்"?**

(திருமூலர், மு.நூப.364:3)

எனும் மந்திர அடியில் கூறியுள்ளார். திருமூலர் கள்ளுண்ணாமையில் இருவேறு நோக்கில் எடுத்துரைத்துள்ளார். சிவானந்த கள்ளைப் பருகலாம் என்றும் மக்களின் அறிவை அழிக்கும் கள்ளை உண்ணக் கூடாது எனவும் கூறியுள்ளார்.

**"யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்**
**போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி**
**மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று**
**ஆகும் மதத்தால் அறிவழித் தாரே?**

(திருமூலர், மு.நூ.335)

எனும் மந்திரத்தில் கள்ளுண்பவர் அறிவை இழப்பர் எனக் கூறியுள்ளார். ஒவ்வொரு தனி மனிதனும் கள் உண்ணாமை அறத்தை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வதே சாலச்சிறந்தது. கள்ளுண்ணாமை நெறியினால் தனிமனித வாழ்வு தழைப்பதுடன் அவனது சமுதாயமும் தழைத்து ஓங்கமுடியும். எனவே கள்ளுண்ணாமை நெறியைக் கடைப்பிடித்தால் வாழ்வில் எல்லா வளமும் பெற்று வாழலாம் என்பதை அறிய முடிகிறது.

**வாய்மை**

ஒவ்வொரு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உயர் பண்பாகப் போற்றப்படுவது வாய்மையாகும். வாய்மையைப் பேசவேண்டும் என்று நமது முன்னோர்களும் சமுதாயத்தில் தனிமனித அறத்தில் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்கள். வாய்மையின் சிறப்பை நாட்டு மக்களுக்கு அறநூல்களும் சமய நூல்களும் எடுத்துரைத்துள்ளன. வாய்மையைக் குறித்த சிறப்பைத் திருமூலரும் இறைநெறியோடு நாட்டு மக்கள் வாழ்விற்கு உயரிய கொள்கைகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனிமனிதன் வாழ்நாள் முழுவதும் வாய்மை எனும் அறக்கொள்கையை பின்பற்றவேண்டும். அதுவே அழியாத புகழ்தேடி தரும் என்பதில் ஐயமில்லை. திருமூலர் வாய்மை அறத்தைப் பின்பற்றுபவர் அடையும் நற்பேற்றை,

**"மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்றன்னைப்**
**பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை**
**உய்கலந்து ஊழித் தலைவனு மாய்நிற்கும்**
**மெய்கலந்து இன்பம் விளைந்திடும் மெய்பார்க்கே"**

(திருமந்திரம்)

எனும் மந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வாய்மையைக் கடைப்பிடிக்கும் அடியார்களின் மெய்யாகிய உடம்பிலும் உயிரிலும் இறைவன் என்றென்றும் கலந்திருப்பான். பொருட்பற்றாலும் உயிர் பற்றாலும் பொய் சொல்லி வாழ்வோரின் முன்னே அவ்விறைவனாகிய ஒருவன் போய் நிற்கமாட்டான் என்று திருமூலர் நாட்டு மக்கள் வாய்மையைப் பின்பற்ற அறிவுறுத்துவதை காணலாம். மனிதன் வாய்மையை வாழ்வில் பின்பற்றினால் இறை அருளை பெற முடியும். பொய்மை என்றும் அழிவை தரும். இதனை மக்கள் உணர்ந்து தங்கள் வாழ்வில் வாய்மை எனும் அறத்தைப் பின்பற்றுவது சாலச்சிறந்தது.

**ஈகை**

நல்லவர், தீயவர்கட்குக் கொடுத்து உதவும் பயன் குறித்து பாத்திரம், அபாத்திரம் என்ற தலைப்பில் திருமந்திரம் விளக்கும். எள்ளளவேனும் சிவஞானிக்கு அளித்தால் முத்தி, சித்தி, போகம் கிடைக்கும். நில மொத்த பொன்னை மூடர்க்கு அளித்தால் பயனில்லை. மறுமையின்பமும் கிடைக்காது என்பதனை,

**திலமத்தனையே சிவஞானிக் கீந்தால்**
**பலமுந்தி சித்தி பரபோக முந்தரும்**
**நிலமத் தனை பொன்னை நின்மூடர்க் கீந்தால்**
**பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. (திருமந்திரம் 501)**

ஒழுக்கமும் நோன்பும் இல்லாதர்க்கு வழங்குதல் பருவந் தப்பிச் செய்த பயிர்போலப் பயனற்றது என்பதனை,

**பாலைக் கறந்து பருகுவதே யொக்கும்**
**கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்**
**சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது**
**காலங் கழிந்த பயிரது ஆகுமே (திருமந்திரம் 505)**

என்ற வரிகள் மூலம் தனிமனித அறமாகிய ஈகை என்னும் பிறர்க்கு உதவும் தன்மையைக் குறிப்பிட்டுள்ளார்.

**இனியவை கூறல்**

இன்சொல் கூறுவதே தனிமனித அறம் என்பதை, "யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே" (திருமந்திரம் 252) என்று திருமந்திரம் அறிவுறுத்துகிறது.

**அடக்கம்**

ஐந்து உறுப்புக்களையும் ஓட்டுக்குள் அடக்கும் ஆமை போல் ஐம்பொறிகளை அடக்கினால் அச்செயல் ஏழு பிறப்பின் கண்ணும் பாதுகாவலை உடையது என்பதற்கிணங்க, மன ஒருமைப்பாடு உடையவரே இறைவன் இயல்பைத் தெளிவாக உணர்வார் என்ற கருத்தை,

**ஒருமையுள் ஆமைபோல் உள்ளைத் தடக்கி**
**இருமையுங் கேட்டிருந்தார்புரை அற்றே**

(திருமந்திரம் 133)

என்ற பாடலில் விளக்குகிறது திருமந்திரம். ஓம் என்னும் மந்திரம் ஐந்துறுப்பையும் தீமைக்கண் செல்லாது அடக்கும் என்ற கருத்தை,

**ஊமை யெழுத்தோடு பேசும் எழுத்துறில்**
**ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்**

(திருமந்திரம் 2158)

என்ற வரிகள் மூலம் தனிமனித அறமாகிய மன ஒருமைப்பாடு என்னும் அடக்கம் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

இக்கட்டுரையின் மூலமாக மனித குலம் தழைத்தோங்க திருமந்திரத்தில் திருமூலர் கூறிய தனிமனித அறங்கள் பற்றி அறிந்துக்கொள்ள முடிந்தது. ஒவ்வொரு மனிதனும் திருமூலர் காட்டிய கொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை. வாய்மை, ஈகை, இனியவை கூறல், அடக்கம் ஆகிய அறங்களைப் பின்பற்றினால் வாழ்வில் எல்லா வளத்தையும் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

**துணை நின்ற நூல்கள்**


1. திருமந்திரம் (பத்தாம் திருமுறை) திருப்பனந்தாள் காசி மடம் வெளியீடு, 2003.
2. இலக்கிய வாழ்வியல் நெறி, எஸ். குருசாமி, தாமரை பப்ளிகேஷன்ஸ், 2002.
3. திருமூலரின் வாழ்வியல் விழுமியங்கள், முனைவர் க.அன்பழகன், ஜெயா பப்ளிகேஷன்ஸ், 2005.

# தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி

தெலுங்கு மொழிச் சிறுபான்மைத் தகுதி பெற்றது
தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டது.
பட்டாபிராம், சென்னை - 600072.

## தமிழ்த்துறை

**முரண்களரி படைப்பகம்** மற்றும் **கல்வெட்டு பேசுகிறது** பன்னாட்டு இலக்கிய இதழும்

இணைந்து நடத்திய

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## பங்கேற்புச் சான்றிதழ்

தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரியில் 11.03.2025 அன்று நடைபெற்ற **"தமிழ் இலக்கியங்களில் அறம்"** என்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் முனைவர்/ திரு/ திருமதி/ செல்வி ...தே. தேன்மொழி... ...உதவிப் பேராசிரியர் வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை... அவர்கள் ...திருமந்திரத்தில் தனிமனித அறம்... என்ற தலைப்பில் கட்டுரை வழங்கி/ பங்கேற்றுச் சிறப்பித்தமையைப் பாராட்டி இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 11/03/25 | 11.3.25 | 11.03.25 | |
| முனைவர். **ஜெ.முனுசாமி** | கவிஞர். **சொர்ணபாரதி** | பேரா. **க.பேபி** | முனைவர். **க.கல்விக்கரசி** |
| முரண்களரி படைப்பகம் | ஆசிரியர் கல்வெட்டு பேசுகிறது | தமிழ்த்துறைத் தலைவர் / ஒருங்கிணைப்பாளர் | கல்லூரி முதல்வர் |